**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 366/2025**

**Prosecution witness : அ.சா. 12** **Date : 19.02.2026.**

| | |
|---|---|
| **Name : மகேந்திரன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மேச்சேரி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.02.2025–ம் தேதி மாலை 5 மணிக்கு இவ்வழக்கில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் கோவிந்தராஜ் அவர்கள் நிலையப் பொறுப்பில் இருந்த போது, சேலம் ப்ரீத்தம் மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனையில் காயமடைந்த சின்னதாயி என்பவர் மயக்க நிலையில் இருந்ததால் அவருடன் உதவியாக இருந்த அவர் மகன் ராஜூ என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப முதல் தகவல் அறிக்கை குற்றஎண். 45/2025 ச/பி 281, 125(a) BNS பிரிவில் வழக்கு பதிவு செய்தார்.

2) பிறகு சம்பவயிடம் சென்று கடந்த 04.02.2025 ம் தேதி மாலை 6 மணிக்கு சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் நந்தகுமார் மற்றும் மணி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர்தயார் செய்தார்.

3) பிறகு சாட்சிகள் ராஜி, வேலுசாமி, குணசேகரன், மணி மற்றும் நந்தகுமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். கடந்த 10.02.2025 ம் தேதி மதியம் 12.15 மணிக்கு மேச்சேரி காவல் நிலையம் முன்பாக வைத்து கைது செய்யப்பட்டு தக்க நிலையப்பிணையில் விடுவித்தார்.

4) முன்பாக இவ்வழக்கில் காயம்பட்ட சின்னதாயி என்பவர் சேலம் அரசு மருத்துவமனையில் கடந்த 11.02.2025–ம் தேதி மாலை 15.50 மணிக்கு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக கிடைத்த தகவலின் பேரில் இவ்வழக்கின் சட்டப்பிரிவை ச/பி 281, 125(a) BNS லிருந்து ச/பி 281, 106(1) BNS சட்டப்பிரிவை மாறுதல் செய்து என் புலன் விசாரணைக்கு வைத்தார்.

5) இவ்வழக்கை நான் என் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவயிடத்தை பார்வையிட்டேன். பின்னர் சாட்சிகள் ராஜி, வேலுசாமி, குணசேகரன், மணி மற்றும் நந்தகுமார் ஆகியோரை விசாரணை செய்ததால் மறுவிசாரணை செய்யாமல் நான் சாட்சிகள் வேலுசாமி, குணசேகரன், மணி, நந்தகுமார் ஆகியோரை விசாரித்தேன். கடந்த 12.02.2025 ம் தேதி பின்னர் பிரேதத்தின் மீது இறப்பின் உன்மை தன்மை அறியும் பொருட்டு பிரேத விசாரணை பஞ்சாயத்தார் முன்னிலையில் சாட்சிகள் ராஜி, செல்வம், ராமு, சின்னபையன், சத்தியநாதன் முன்னிலையில் காலை 8.30 மணி முதல் 10.30 மணி வரை பிரேத விசாரணை செய்யப்பட்டது. **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.8 ஆகும்.**

**6)** பின்னர் சின்னதாயி என்பவரின் இறப்பின் உண்மை தன்மை அறிய வேண்டி மருத்துவர் காஞ்சனா அவர்களிடம் காவலர் பாரதியார் என்பவர் மூலமாக பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தினேன். 24.02.2025 ம் தேதி இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய TN 93 F 2805 என்ற ராயல்என்பீல்டு இரு சக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்தேன். TN 93 F 2805 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ–9** ஆகும். கடந்த 02.05.2025 ம் தேதி ப்ரீத்தம் மருத்துவமனை மருத்துவர் அருண் ராஜமாணிக்கம் என்பவரிடம் விபத்து பதிவேடு பெற்று அவரையும், இறப்பை உறுதி செய்த சேலம் அரசு மருத்துவமனை மருத்துவர் பெரோஸ் அகமத் என்பவரை விசாரித்து இறப்பு உறுதி அறிக்கை பெற்றேன். இறப்பு உறுதி அறிக்கை **அ.சா.ஆ.10** ஆகும் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த சேலம் அரசு மருத்துவமனை மருத்துவர் காஞ்சனா அவர்களிடம் அறிக்கை பெற்று அவரையும், வாகனத்தை ஆய்வு

செய்த மேட்டூர் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி. மீனாகுமாரி என்பவரிடம் அறிக்கை பெற்று அவரையும், பிரேதத்தை பரிசோதனைக்கு உட்படுத்திய காவலர் பாரதி என்பவரையும் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணை செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் கோவிந்தராஜ் என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

7) இவ்வழக்கின் சாட்சிகளை விசாரித்த பிறகு, குற்றத்தன்மை உண்மை என தெரியவந்ததால் வழக்கு தன்மைக்கேற்ப சாட்சிகளின் விசாரணைக்கேற்ப புலன் விசாரணையை முடிவு பெற்ற பிறகு எதிரியின் மீது கடந்த 02.05.2025–ம் தேதி 45/2025 ச/பி 281, 106(1) BNS ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல்செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

8) அ.சா.1 கொடுத்த புகார், முதல் தகவல் அறிக்கை, 161 வாக்குமூலங்கள் அனைத்திலும் வாகன பதிவெண் TN 93 F 2305 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் விசாரணையில் கைதவறுதலாக மேற்சொன்ன பிழை ஏற்பட்டுள்ளது. புகார்தாரர் ராஜி, செல்வம், ராமு, சத்தியநாதன், சின்னபையன் அனைவருமே இறந்த சின்னதாயி என்பவரின் மகன்கள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் என்றால் ஆமாம்.

9) சாட்சிகள் ராஜி, செல்வம், ராமு, சத்தியநாதன், சின்னபையன் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லவில்லை என்றால் ஆமாம். விபத்தில் அடிப்பட்ட சின்னதாயி தனக்கு எப்படி அடிப்பட்டதாக கூறியதாக எங்கும் இல்லை என்றால் சரிதான். ப்ரீத்தம் மருத்துவமனையில் 3ம் தேதி7 மணிக்கு சிகிச்சையில் சேர்ந்து என்று விடுவிக்கப்பட்டு சேலம் அரசு மருத்துவமனையில் சேர்ந்தார் என்று என் விசாரணையில் தெரிய வரவில்லை என்றால் 10.02.2025ம் தேதி ப்ரீத்தம் மருத்துவமனையிலிருந்து சேலம் மருத்துவமனைக்கு சென்றுள்ளார்கள். ப்ரீத்தம் மருத்துவமனையில் இருந்து விடுவிப்பு அறிக்கை பெறவில்லை என்றால் ஆமாம்.

10) சம்பவயிடத்தை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். சம்பவயிடத்தில் சாலை தெற்கிலிருந்து வடக்காக போகும் போது மேடாக இருக்கும் என்றால் சரியல்ல. ரோட்டின் மேற்கு பக்கம் பள்ளமாக இருக்கும் என்றால் சரியல்ல. என் விசாரணை மற்றும் வாக்குமூலம் பதிவு செய்த போது விபத்தில் இறந்தவர் தலையில் ஆடு மாடுகளுக்காக சுமையை தூக்கி சென்றதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான்.

11) ப்ரீத்தம் மருத்துவமனையில் சேரும் போது அ.சா.1 தனது வயது 50 என்றும் தாயார் வயது 60 என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மகஜர் சாட்சிகள் சம்பவயிட சாட்சிகள் இல்லை என்றால் சாட்சி நந்தகுமார் சம்பவயிட பகுதியை சேர்ந்தவர். சின்னதாயி மாலை நேரத்தில் மேற்கிலிருந்து தலையில் புல் கட்டுடன் கவனக்குறைவாக நடந்து வந்து அவராகவே விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. அது சம்மந்தமாக சம்பவத்தை கேள்விப்பட்டு புகார் கொடுத்த அவரது மகன் ராஜூவின் புகாரின் பேரில் சம்பவத்தை சரிவர விசாரணை செய்யாமல் தவறான ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் கோப்புகளை என்னிடம் ஒப்படைத்தார் என்றும் நான் அதனை சரிவர விசாரிக்காமல் எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

நான் சொன்னமாதிரி, சொன்ன நேரத்தில் சொன்னவிதத்தில், சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் சம்பவயிடம் செல்லாமல் போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.02.20 11:18:37 +0530

Judicial Magistrate No.II,
Mettur.